Sri Lanka Forum of University Economists

**SRI LANKA FORUM OF UNIVERSITY ECONOMISTS**

# SRI LANKA ECONOMIC RESEARCH CONFERENCE 2012

# PROCEEDINGS


## Editorial Board

**Chief Editor**
Dr T Lalithasiri Gunaruwan

**Co-Editors**
Prof Amala de Silva
Ms Nadeeka de Silva
Mr R M Kesavaraja
Ms Nayanarasi Premachandra
Ms Harshanee Jayasekera



Department of Economics, University of Colombo
Sri Lanka

29th and 30th November 2012

Copyright © November 2012
Sri Lanka Forum of University Economists

National Library of Sri Lanka - Cataloguing-In-Publication Data
Proceedings of the Sri Lanka Economic Research Conference 2012

ISSN 2279-2406

Published By Sri Lanka Forum of University Economists
Department of Economics, University of Colombo
Colombo 03, Sri Lanka.
Tel : +94 112 582666,
Web :www.slfue.com

All rights reserved. No Part of this Publication may be reproduced, stored in a retrieval system or transmitted by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the written permission of the publisher.

Printed by
Printec Establishment (pvt) Ltd.
52/1, Ekwatta Road, Mirihana, Nugegoda, Sri Lanka.
Tel: +94 112 815 816 Web: www.printec.lk

This publication is fully sponsored by
Lanka Hospitals
Narahenpita, Sri Lanka

LANKA
HOSPITALS

# போர்த்துக்கேயர் கால யாழ்ப்பாணத்தின் பொருளாதார நடவடிக்கைகள் ஒரு வரலாற்றுப்பார்வை

**கந்தையா அருந்தவராஜா**
*வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

**பிரதான சொற்பதங்கள்:** *பொருளாதாரச் சுரண்டல், யானை வர்த்தகம், முத்துக்குளித்தல், நிலவரி, தோம்பு*

## அறிமுகம்

கீழைத்தேய நாடுகளுக்கு வருவதற்கான கடல்மார்க்கப் பாதையினை கண்டுபிடிப்பதற்கான முயற்சியில் ஆரம்பத்தில் வெற்றி பெற்ற போர்த்துக்கேயர்கள் முதன் முதலாக 1498இல் வாஸ்கொடகாமாவின் தலைமையில் இந்தியாவின் கள்ளிக்கோட்டையினை வந்தடைந்தனர். தொடர்ந்து கோவாவினைத் தங்களது கீழைத்தேய ஆதிக்க நடவடிக்கைகளுக்குத் தலைமையகமாக மாற்றிக்கொண்ட அவர்கள் அதற்கான நடவடிக்கைகளிலும் தங்களை ஈடுபடுத்திக்கொண்டனர். இதன் ஒரு கட்டமாகவே 1505இல் இலங்கையின் கரையோரங்களில் எதிர்பாராதவிதமாக காலடி பதித்த போர்த்துக்கேயர்கள் தொடர்ந்து 1658வரை அப்பகுதிகளில் அவர்களது செல்வாக்கினை நிலைநாட்டிக்கொண்டனர். அவர்கள் இலங்கை வந்த காலப்பகுதியில் இலங்கையானது மூன்று பெரும் பிரிவுகளாகக் கோட்டை, கண்டி, யாழ்ப்பாணம் எனப் பிரிக்கப்பட்டுக் காணப்பட்டதுடன் இவற்றுக்கிடையிலே முரண்பாடுகளும் தலைவிரித்தாடிக்கொண்டிருந்தன. எனவேதான் போர்த்துக்கேயர்களின் நடவடிக்கைகள் இலங்கையில் விரிவுபடுத்தப்பட்டமைக்கு வெறுமனே பொருளாதார மற்றும் மதம் பரப்புகின்ற காரணிகள் மட்டுமன்றி அரசியல் சார்ந்த காரணிகளும் ஏராளமாகவே நிறைந்திருந்தன எனக் கூறுகின்றார் செ. கிருஷ்ணராஜா. *(கிருஷ்ணராஜா,செ.2000,130)* எவ்வாறாயினும் இலங்கையின் இத்தகைய குழப்பமான அரசியல் நிலையினைத் தங்களது ஆதிக்க விஸ்தரிப்புக்குச் சாதகமான முறையில் பயன்படுத்திக்கொண்ட போர்த்துக்கேயர்கள் படிப்படியாக இலங்கையின் கரையோரங்களைக் கைப்பற்றி இறுதியாக யாழ்ப்பாணத்தினையும் 1619இல் தங்களது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர்.

போர்த்துக்கேயர்கள் யாழ்ப்பாணம் வந்த சமயத்தில் யாழ்ப்பாண அரசானது இலங்கையின் வடபகுதியில் தமிழ் மன்னர்களின் ஆதிக்கத்தின்கீழ் அதிகளவான தமிழர்களை உள்வாங்கிய நிலையில் சைவமரபுகளுடன் இணைந்த வகையிலே செல்வாக்குப் பெற்றுக் காணப்பட்டது. இது யாழ்ப்பாணக்குடாநாடு, அயலில் காணப்பட்ட தீவுகள், மன்னார் தொடக்கம் முல்லைத்தீவு வரையிலான பகுதிகள் ஆகியவற்றினை உள்ளடக்கியதாகக் காணப்பட்டதென்பது போர்த்துக்கேயர்களது ஆட்சிக்காலத்தின் இறுதியில் இலங்கையில் மதகுருவாகப் பணியாற்றிய குவைறோஸ் சுவாமிகளின் கருத்தாக உள்ளது *(Queyroz Fernao De,1930,51)*. பொதுவாக போர்த்துக்கேயர்கள் யாழ்ப்பாண அரசினை முழுமையாகக் கைப்பற்றிக்கொள்ளும்வரை இலங்கையின் வடக்கு, கிழக்கு, வடமேற்குப் பிரதேசங்கள் யாவும் யாழ்ப்பாண அரசர்களின் கட்டுப்பாட்டின் கீழேயே காணப்பட்டு வந்தன. 13ஆம் நூற்றாண்டின் பின்னதாக இந்த அரசானது அதி உன்னதமான நிலையினையும் அதிகாரத்தினையும் பெற்றிருந்ததுடன் ஏனைய சிற்றரசுகளிடமிருந்து திறையினைப் பெற்றுக் கொள்கின்ற நிலையிலும் காணப்பட்டது. அத்துடன் அக்காலப்பகுதியல் யாழ்ப்பாண இராச்சியத்தினை ஆட்சி

செய்த அரசர்களை ஆரியச்சக்கரவர்த்திகள் என்ற பெயர்களில் அழைத்துக்கொள்ளப்பட்டமையும் நோக்கத்தக்கது.
போர்த்துக்கேயர்கள் இலங்கை வந்த காலப்பகுதியில் யாழ்ப்பாண இராச்சியமானது சுதந்திரமும் தன்னாதிக்கமும் கொண்ட அரசாகக் காணப்பட்டதுடன் நல்லூரினைத் தனது தலைநகரமாகக்கொண்டு விவசாயத்தினையும் மீனவத்தொழிலையும் தங்களது பகுதியின் பிரதான வருவாய் மூலங்களாகப் பெற்றிருந்தது. இதனைவிட மன்னாருக்கும் திருகோணமலைக்குமிடையிலே 18 குறிச்சிகளைக் கொண்ட பகுதியானது வன்னியர்களால் ஆட்சி செய்யப்பட்டு வந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதன் ஆட்சியாளர்கள் தன்னாதிக்கம் பெற்ற சுதந்திர ஆட்சியாளர்களாக யாழ்ப்பாண அரசின் கட்டுப்பாடுகளிலிருந்து விலகிய வகையில் தங்களது ஆட்சி நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனரென்பதும் அவதானிக்கத்தக்கது.

1619இல் முற்றுமுழுதாக யாழ்ப்பாணத்தினைத் தங்கள் வசமாக்கிக்கொண்ட போர்த்துக்கேயர்கள் யாழ்ப்பாணத்தில் வணிகத்துடன் மதம் பரப்புகின்ற முயற்சிகளிலும் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு அவற்றில் வெற்றியும் கண்டனர். இதற்கு யாழ்ப்பாண அரசின் பலவீனமும் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்துகொண்டிருந்த அக்கால சமூகத்தின் நடவடிக்கைகளும் போர்த்துக்கேயர்களுக்கு இதற்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக்கொடுத்தது. ஏனைய ஐரோப்பியர்களைப் போலவே இவர்களும் குடியேற்றநாடுகளின் வளங்களை முற்றுமுழுதாகச் சுரண்டுகின்ற முயற்சியில் யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி இலங்கை முழுவதிலுமே ஈடுபட்டனர். தங்களின் பொருளாதார நடவடிக்கையின் ஒரு பாகமாக இலங்கையின் தென்பகுதியில் கறுவா வர்த்தகத்தில் அதிகளவான ஈடுபாட்டினைக் காட்டிய போர்த்துக்கேயர்கள் பிற்பட்ட காலங்களில் தமிழர்கள் அதிகளவில் வாழ்ந்த இலங்கையின் வடபகுதியான யாழ்ப்பாணத்தில் நிலவரிமுறையினை விரிவுபடுத்தியும் யானைவர்த்தகம் மற்றும் முத்துக்குளித்தல், போன்றவற்றிலும் சில வகையான விவசாயப் பொருட்களின் உற்பத்தியிலும் அவற்றின் ஏற்றுமதி இறக்குமதி தொடர்பான வர்த்தக முயற்சிகளிலும் இறங்கியதன் மூலமாகப் பெருமளவிலான இலாபத்தினைப் பெற்றுக்கொண்டனர் *(பத்மநாதன,>rp>2001>49)*. தங்களது வருவாயினைப் பெருக்குவதனை இலக்காக மேற்கொண்டிருந்த இவர்கள் மக்களின்மீது பலவிதமான வரிகளை விதித்தனர்.

போர்த்துக்கேயர்களது அரசியல் நிர்வாகச்செயற்பாடுகளும் அவர்களது பொருளாதார நடவடிக்கைகளும் இலங்கையில் ஒன்றுடனொன்று தொடர்புபட்ட வகையிலேதான் அமைந்திருந்தன. 1543இல் போர்த்துக்கேயர்களின் யாழ்ப்பாணத்தின் மீதான முதலாவது நேரடித் தொடர்புகளும் 1560இன் பின்பாக யாழ்ப்பாணத்தரசர்களிடமிருந்து திறை பெற்றுக்கொண்ட நிகழ்வுகளும் 1561இல் மன்னாரில் கோட்டையொன்றினை அமைத்துக்கொண்டதன் மூலமாக அப்பகுதிகளில் தங்களது மேலாண்மையினை நிலைநிறுத்திக்கொண்ட சம்பவங்களும் யாழ்ப்பாண இராச்சியத்துக்குக் கிடைத்துவந்த வருமானத்தினை முக்கியமாகப் பாதித்த நிகழ்வுகளாகக் காணப்பட்டன. இதனால் குறிப்பாக யாழ்ப்பாணத்தரசர்களுக்கு அதுவரை காலமும் கிடைத்துவந்த வருவாயில் பாரியதொரு வீழ்ச்சியேற்பட்டது *(கிருஷ்ணராஜா,செ,2000,130)*. மேலும் யாழ்ப்பாணத் திலிருந்து பெறப்பட்ட வருவாயின் மூலமாகவே அவர்களது அரச இயந்திரமானது இலங்கையில் பெருவளர்ச்சி கண்டதெனலாம். படையினர்கள், நிர்வாகப்பணியாளர்கள் மற்றும் கூலிப்படையினருக்கும் யாழ்ப்பாணத்திலிருந்து பெறப்பட்ட வருவாயில் சம்பளம் கொடுக்கப்பட்டது. மேலும் கோட்டைகள் கட்டுவதற்கும் மதப்பரப்புச் செயற்பாடுகளுக்கும் யாழ்ப்பாணத்திலிருந்து கிடைத்த வருவாயில் பெரும் பங்கு பயன்படுத்தப்பட்டதெனலாம். எவ்வாறாயினும் யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்தினைத் திட்டமிட்டு சுரண்டுகின்ற இலக்குக்கொண்டவர்களாகக் காணப்பட்ட போர்த்துக்கேயர்களது செயற்பாடுகளினால்

யாழ்ப்பாணத்தின் பொருளாதாரம் மட்டுமன்றி முழு இலங்கையின் பொருளாதாரமும் பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## நோக்கங்கள்

யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயர்கால பொருளாதார நடவடிக்கைகள் யாழ்ப்பாணத்தரசர்கால பொருளாதார நடவடிக்கைகளிலிருந்து பல விடயங்களில் வேறுபட்டும் சில அம்சங்களில் ஒற்றுமைப்பட்ட நிலையிலும் காணப்படுகின்றன. ஏற்கனவே நடைமுறையிலிருந்த சில பொருளாதார ஒழுங்குமுறையுடன் புதிய சில புதிய பொருளாதார ஒழுங்குமுறைகளையும் அவர்கள் புகுத்தினர். இவ்வாறு தங்களது புதிய சில பொருளாதார ஒழுங்குமுறைளைப் புகுத்துகின்ற சந்தர்ப்பத்தில் யாழ்ப்பாணத் தமிழ் மக்களது பொருளாதார சமூக நிலையில் ஏற்பட்ட மாற்றங்கள், அவர்கள் எதிர்கொண்ட சவால்கள், போர்த்துக்கேயர்களது பரமவிரோதிகளாகவும் தமிழ்பேசுகின்ற இன்னொரு பிரிவினர்களாகவும் அக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வந்த இஸ்லாமிய மக்கள் எதிர்நோக்கிய நெருக்கடிகள் போன்ற பல விடயங்களை இவ் ஆய்வு வெளிப்படுத்துகின்றது. மேலும் இந்த ஆய்வானது போர்த்துக் கேயர்கால இத்தகைய யாழ்ப்பாணத்தின் பொருளாதார நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தி அவற்றினை ஆவணப்படுத்துகின்ற வகையில் அமைந்துள்ளது. அத்துடன் இப்பகுதியினைப் பற்றியதாக விரிவான ஆய்வுகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஆய்வுமுறையியல்

ஆய்வின் அணுகுமுறையானது பொருளாதார மற்றும் வரலாற்று அடிப்படையில் அமைந்துள்ளது. அதாவது இவ்வாய்வுக் கட்டுரையில் முதல்தர மற்றும் இரண்டாந்தரச் சான்றுகள் வரலாறு மற்றும் பொருளாதார அணுகுமுறையின் அடிப்படையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. போர்த்துக்கேயர்கால ஆவணங்கள், யாழ்ப்பாணத்தரசர்கால இலக்கியங்கள், போர்த்துக்கேய குருமார்களின் படைப்புக்கள், போன்றன பிரதான முதல்தரச் சான்றுகளாக உள்ளன. போர்த்துக்கேய ஆவணங்களையும் பிற ஆதாரங்களையும் அடிப்படையாக வைத்துப் பிற்பட்ட காலங்களில் எழுதப்பட்ட இலக்கியங்கள், ஆய்வுக் கட்டுரைகள், இணையத்திலிருந்து பெறப்பட்ட சான்றுகள் போன்றவை இரண்டாந்தரச் சான்றுகளாக அமைகின்றன. மேலும் இத்துறையில் ஈடுபாடுபாடு கொண்ட அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் போன்றவர்களிடமிருந்து பல்வேறு தகவல்கள் பெறப்பட்டு இக்கட்டுரைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## சுருக்கமும் முடிவும்

இலங்கையின் வடபகுதியான யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட அரசியல் குழப்பநிலையினைத் தங்களுக்குச் சாதகமான வகையில் பயன்படுத்தி அப்பகுதிகளைத் தங்களது முழுமையான கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்ததன் மூலமாக மதம் பரப்புதல் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளில் தனியுரிமை பெற்றுக்கொண்டது மட்டுமன்றி தங்களின் வருவாயினை எவ்வாறான முயற்சிகளை மேற்கொண்டும் பெருக்க எண்ணினர். போர்த்துக்கேயர்கள் இலங்கை வந்த ஆரம்ப காலங்களில் நாட்டின் ஏனைய பகுதிகளில் அவர்கள் அக்கறையினைக் காட்டிய அளவுக்கு யாழ்ப்பாணத்தில் காட்டவில்லை. அவர்களது தொடர்புகள் யாழ்ப்பாணத்துடன் இருந்ததே தவிர நீண்டகாலத்திற்குப்

பின்னராகவே அவர்கள் யாழ்ப்பாணத்தினைத் தங்களது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். அவர்கள் இலங்கையின் பிற பகுதிகளில் மேற்கொண்டு வந்த பொருளாதார நடவடிக்கையினை ஒத்தவகையில் யாழ்ப்பாணத்திலும் சுரண்டலின் அடிப்படையில் மேற்கொண்டு வந்தாலும் அவர்களது பொருளாதார நடவடிக்கையின் மூலமாக யாழ்ப்பாணத்தினை அவர்களது முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. அதேநேரத்தில் அவர்களது புதிய பொருளாதார ஒழுங்குமுறைகளுக்கும் யாழ்ப்பாணத்தவர்கள் பெருமளவுக்கு உள்வாங்கப்படவில்லையென்பதும் நோக்கத்தக்கது. இஸ்லாமியர்கள் தங்களுடைய பாரம்பரியத் தொழிலான வியாபார நடவடிக்கைகளை இழந்த நிலையில் யாழ்ப்பாணத்தினைவிட்டு விலகி ஒதுங்கிவாழ வேண்டிய சூழலைப் போர்த்துக்கேயர்கள் ஏற்படுத்திக் கொடுத்தனர்.

## ஆய்வுக்கு உதவியவை

Marashall,R.,Singer. (1981), *The Emerging Elite( Study of political leadership in Ceylon),* (Cambridge: Massachusetta Institute of Technology Press).

Pieries, P.E. ed, (1953), *Ceylon and the Portuguese(1505-1658),* (Delhi: Sri Satguru publications).

Queyroz, Fernao De. (1930), *The Temporal and Spiritual Conquest of Ceylon*, Colombo. (trans. Perera,S.G.).

கிருஸ்ணராஜா,செ. (2000) *இலங்கை வரலாறு.* பாகம்.02, (யாழ்ப்பாணம்: பிறைநிலா வெளியீடு).

பத்மநாதன், சி.(2001), *இலங்கைத் தமிழர் தேசவழமைகளும் சமூகவழமைகளும்,* (கொழும்பு: குமரன் புத்தக இல்லம்).